# கடைசிகால தீர்க்கதரிசனங்கள் 3



## கலிஃபோர்னியாவின் மேல் நியாயத்தீர்ப்பு

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# இயேசு, "பூமியதிர்ச்சி பல இடங்களில் உண்டாவதைக் குறித்து நீங்கள் கேள்விப்படுவீர்கள்" என்றார்



# செய்தி: 57-04-17 கர்த்தருடைய இரண்டாம் வருகை

27. இயேசு அதை அவர்களுக்கு கூறத்துவங்கினபோது, அவர்கள், "உலகத்தின் முடிவைக் குறித்த வருகையின் அடையாளம் என்னவாயிருக்கும்?" என்று கேட்டனர்.

28. அப்பொழுது இயேசு அவர்களுக்கு, "ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நேரம் உண்டாகும். நீங்கள் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள். கொள்ளைநோய்களும், பூமி அதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்" என்று கூறத் துவங்கினார்.

29. அன்றொரு நாள் கலிபோர்னியாவில் உள்ள ஒக்லேன்ட் என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அங்கே இருந்தது எங்களுக்கு ஒரு சிலாக்கியமாயிருந்தது. மனைவி முதன்முறையாக பூமியதிர்ச்சியின்போது இருந்த சமயமாயிருந்தது. நான் சிகை அலங்காரக் கடையில் அமர்ந்து கொண்டிருந்தேன். நான்... அந்த அறையோ அப்படியே கொஞ்சம் அசைந்தது. உடனே வானொலியில், “பூமியதிர்ச்சி உண்டானது” என்று துரிதமாக அறிவிக்கப்பட்டது. அப்பொழுது, “அவர்கள் சுமார் எட்டு நிமிடங்கள் ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர்” என்றும் கூறினர்.

அப்பொழுது நான், “ஓ, இதுவே கடைசியான ஒன்றாயிருக்குமா” என்று எண்ணினேன்.

30. நான் சிகை அலங்காரக் கடையிலிருந்து துரிதமாகப் புறப்பட்டு, வீதியில் நின்று கொண்டிருந்த என்னுடைய மனைவியைச் சந்தித்து, பின்னர் எங்களுடைய அன்பான சிறுவர்களுக்கு சில சிறு வண்ணப்பட அட்டைகளை அனுப்பும்படி வாங்குவதற்கு ஒரு சிறு மருந்துக் கடைக்குள்ளாக நடந்து சென்றோம். நாங்கள் அங்கிருந்தபோது, ஒன்றுமே புரியாத வகையில், ஒரு மனிதன் எப்போதுமே உணர்ந்திராத வினோதமான உணர்வுகள் உண்டாக, முழு பூமியும் அசையத் துவங்கியது. கண்ணாடிக் குப்பி கள் அலமாரியிலிருந்து விழத்துவங்கின. புகைப்போக்கி குழாய்கள் கட்டிடத்தி லிருந்து விழத் துவங்கி வீதிக்குச் சென்று உடைந்து, வழிந்தோடின. சுவர்களிலிருந்து பூசப்பட்டிருந்த அரைச்சாந்து விழுந்த காரணத்தினால் ஜனங்கள் கூக்குரலிட்டுக்

கொண்டு கதறினர். முப்பது, நாற்பது அடுக்கு மாடிகளைக் கொண்ட பெரிய கட்டிடங்கள் ஒன்றோடொன்று ஆடி, புகை எழும்புமளவிற்கும் மோதிக் கொண்டு, காரை பூசப்பட்டதிலிருந்து தூசியானது பெரிய காளான்களைப் போல எழும்பினது. ஜனங்களோ கூச்சலிட்டுக் கொண்டே ஓடத் துவங்கினர். அப்பொழுது நான், “அது சர்வவல்லமையுள்ள தேவனுடைய விரலாய் உள்ளது என்றும், 'அது சுவற்றின் மேல் எழுதின கையெழுத்து” என்றும் கூறினேன்.

31. இயேசு, “பூமியதிர்ச்சி பல இடங்களில் உண்டாவதைக் குறித்து நீங்கள் கேள்விப்படுவீர்கள்” என்றார். பூமியானது நெடுஞ்சாலையில் நீண்ட தூரத்திற்கு சுமார் ஐந்து அடி அகலத்திற்கு பிளந்து கொண்டு, நூற்றுக்கணக்கான அடிகள் பூமிக்குள் சென்றுவிட்டது. ஒரு இடத்தில் நெடுஞ்

சாலையே முழுமையாக உள்ளே போய் விட்டது. அது பிளவுண்டு திறந்து கொண் டதை நான் எண்ணிப் பார்த்தபோது, அது, “பல இடங்களில் பூமியதிர்ச்சி உண்டா கும்” என்று கூறின சர்வ வல்லமையுள்ள தேவனின் விரல் என்பதை ஏறக்குறைய அப்படியே என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

32. அந்நாளின்போதே எட்டு பல்வேறு பட்ட இடங்களில் நிகழ்ந்த பூமியதிர்ச்சிகள் அந்த நகரத்தையே அசைத்திருந்தன. அதன் பின்னரோ, மதுபானக்கடைகள் எப்போதும் போல திறந்தே இருந்தன. குடிகாரர்கள் வீதிகளில் திரளாய் மொய்த்துக் கொண்டிருந்தனர். ஸ்திரீகளோ வீதியில் அரை நிர்வாண ஆடையை உடுத்திக் கொண்டு நடந்து சென்றனர். மற்றும் ஒவ்வொரு காரியமும் ஒன்றுமே எப்போதும் சம்பவித்திராதது போன்று

காணப்பட்டது. இந்தத் தேசத்தை அசைக்கும்படி என்ன சம்பவிக்கும் என்று நான் அறியாத அளவிற்கு ஜனங்கள் அவ்வளவாய் உலகியல் வாழ்வில் சிக்குண்டுள்ளனர். அவர்கள் அதிக அக்கறையற்றவர்களாயிருப்பது போன்று தோன்றுகிறது. அவர்கள் கவனிக்கிற தில்லை.



அதிலிருந்து வார்த்தை முழங்கி, மூன்று முறை குலுக்கி, “அது மேற்கு கரைக்கு செல்வதைக் கவனி'' என்றது. அது அங்கு சென்று அலாஸ்காவைக் குலுக்கினது. அது உரைத்தபடியே மேற்கு கரையை தாக்கினது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-12-27 இவர் யார் என்று சொல்லுகிறீர்கள்?

78 அங்கு நின்றுகொண்டு ஆகாயத்திலிருந்து ஒரு சுழல்காற்று இறங்கி வருவதைக் கண்டேன்.

நாங்கள் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்த ஒரு மலையை அது இரண்டாகப் பிளந்து, மரங்களின் உச்சியை முறித்துப் போட்டது.

இப்படிப்பட்ட காரியங்கள் நடந்தன.

அதிலிருந்து வார்த்தை முழங்கி, மூன்று முறை குலுக்கி, ''அது மேற்கு கரைக்கு செல்வதைக் கவனி'' என்றது.

அது அங்கு சென்று அலாஸ்காவைக் குலுக்கினது.

அது உரைத்தபடியே மேற்கு கரையை தாக்கினது.

அதற்கு முந்தின நாள், நான் ஒரு பாறையை எடுத்து ஆகாயத்தில் எறிந்து, "**கர்த்தர் உரைக்கிறதாவது**, அந்த நேரம் இங்கு வந்துவிட்டது. பூமியில் நியாயத் தீர்ப்புகள் தொடங்கும். மேற்கு கரை முழுவதும் குலுங்கும்'' என்றேன்.

அது எவ்வளவு பிழையின்றி நிறை வேறினது பாருங்கள்.

நாளுக்கு நாள், அவர் உரைத்தபடியே நடந்து வருகிறது.

சகோதரரே, அதை நாம் எப்படி புறக் கணிக்க முடியும்? நம்முடைய விசுவா சத்தை நாம் அவர் பேரில் வைத்திருப் போம்.

# இரண்டு நாட்களுக்குப் பிறகு அலாஸ்கா நகரம் ஏறக்குறைய பூமியிலே புதைக்கப்பட்டது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-02-19 இந்த வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று

---

156. சென்ற வருடம் அதே இடத்தில் நின்று கொண்டிருந்த நாங்கள் (இங்கே இருக்கும் உட்டு அவர்களும் நானும்) அந்த குன்றின் மேல் ஏறினோம் - அவருடைய மனைவி வியாதியாயிருந்த வருத்தத்தில் இருந்தோம். அப்பொழுது பரிசுத்த ஆவி "இங்கே விழுந்து கிடக்கும் ஒரு கற்பாறையை எடுத்து காற்றிலே தூக்கி எறி. அது கீழே விழும் போது "**கர்த்தர் உரைக்கிறதாவது**, பூமியை நியாயத்தீர்ப்பு தாக்கும். அடுத்த சில மணி நேரங்களில் தேவனுடைய கரத்தைக் காண்பாய் என்று அவனுக்குச் சொல்" என்றது.

157. (இன்றிரவு இங்கே இருக்கும்) உட்டு அவர்களுக்கு இது நிறைவேறி

னதைக் குறித்துச் சொன்னேன். அடுத்த நாள் காலையிலே இது நிறைவேறின் போது, அங்கே பத்து அல்லது பதினைந்து மனிதர்கள் இருந்தார்கள் - அது நிறைவேறின போது தேவன் மலையைத் தோல் உரிப்பது போல் வந்த புயல் காற்றிலே வந்து மரங்களின் மேல் பாகங்களைத் தளரச் செய்து மூன்று பலமான வெடிகளை உண்டாக்கி "மேற்கு கடற்கரைப் பக்கம் நியாயத்தீர்ப்பு போகிறது" என்றார்.

158. இரண்டு நாட்களுக்குப் பிறகு அலாஸ்கா நகரம் ஏறக்குறைய பூமியிலே புதைக்கப்பட்டது அத்தினத்திலிருந்து அந்த கடற்கரை தேவனுடைய நியாயத்தீர்ப்பில் சிக்குண்டு எரிமலை போன்ற குமுறுதலில் மேலும் கீழுமாக அலசப்படுகிறது

# அதை தடுத்து நிறுத்த எவ்வித வழியுமில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-07-25M கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்

17. நாம் கடைசி காலத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பதே நம்பிக்கையாகும். வேதாகமம் படிப்பவர்களும், விசுவாசி களில் பெரும்பான்மையோரும், இனி உலக வரலாறு எழுதிப் பயனில்லை என்பதை நன்கு அறிவர். ஏனெனில் அதை படிப்பதற்கு யாரும் இருக்கப் போவ தில்லை. இது எப்பொழுது சம்பவிக்கும் என்றும் இது எவ்வளவு காலம் நீடித் திருக்கும் என்றும் எனக்குத் தெரியாது. ஏன், அந்த நிமிடத்தையும் நேரத்தையும் பரலோகத்திலுள்ள தூதர்களும்கூட அறிய மாட்டார்கள். ஆனால் இப்பொழுது நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கும்

காரியங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கும்போது, நமது மீட்பு சமீபமாயுள்ளதை அறிந்து நாம் தலைகளை உயர்த்த வேண்டுமென கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளார்.

18. 'சமீபமாயிருக்கிறது' (nigh) என்னும் சொல் எதைக் குறிக்கிறது என்பது எனக்குத் தெரியாது. விஞ்ஞானிகள் அன்று கூறினது போன்று - அதாவது பூமியில் ஆயிரக்கணக்கான மைல்கள் நீளத்தில் பிளவுகள் ஏற்பட்டுள்ளது என்றும், பூமி தண்ணீரில் மூழ்கப் போகிறது என்றும் கூறினார்களே - ஒருக்கால் அதுவாயிருக் கலாம். லாஸ் ஏஞ்சலீஸ் பட்டணம் எப்பொழுது தண்ணீருக்குள் மூழ்கும் என்னும் கேள்வி அந்த விஞ்ஞானியிடம் கேட்கப்பட்ட போது, அவர் “ஐந்து நிமிடங்கள் அது மூழ்கி விடலாம், அல்லது

ஐந்து ஆண்டுகள் கூட பிடிக்கலாம்'' என்று பதிலுரைத்தார்.

ரேடார் (Radar) என்னும் கருவியின் மூலம் பூமியில் ஏற்பட்டுள்ள பிளவை அவர்கள் எங்ஙனம் தொடர்ந்து சென்றனர் என்று உங்களில் அநேகர் தொலை காட்சியில் கண்டீர்கள். அது கடற்கரை வழியாகச் சென்று, சான் ஜோஸ் (San Jose) என்னும் ஸ்தலத்தின் கீழ் சென்று, தாண்டி அலஸ்காவை அடைந்து, அலூசியன் தீவுகளைக் (Alutian Islands) கடந்து, இருநூறு மைல்கள் கடலுக்குள் சென்று, சான்டியாகோவை (San Diego) அடைந்து, லாஸ் ஏஞ்சலிஸ் பின்னால் சென்றது. இங்கு ஏற்படும் நிலவதிர்ச்சிகள் யாவும் இந்த குழிவு ஸ்தலத்தில் ஏற்படும் எரிமலை குமுறல்களினால் உண்டான வையாம். அதற்கு ஏதோ ஒரு பெயருண்டு.

அங்கு அசைவு உண்டாவதால், நாம் அநேக ஆண்டுகளாக மேற்கு கடற் கரையில் கண்டு கொண்டு வரும் நிலவதிர்ச்சிகள் உண்டாகின்றனவாம். இப்பொழுது பூமியானது எல்லா திசை களிலும் பிளவுபட்டுள்ளது.

19. நிருபர் ஒருவர் ஒரு விஞ்ஞானி யிடம், "பூமி ஒருக்கால் விழுங்கப்படலாம் அல்லவா?'' என்று கேட்டாராம். அதற்கு அந்த விஞ்ஞானி "விழுங்கப்படலாம் என்றல்ல. நிச்சயமாக விழுங்கப்படும்'' என்று பதிலுரைத்தாராம். ''நம் சந்ததியில் இது நிகழ வாய்ப்பில்லை அல்லவா?'' என நிருபர் கேட்க, விஞ்ஞானி, அப்படியல்ல, இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் இது நிகழலாம். அல்லது இன்னும் ஐந்து ஆண்டுகள் கூட செல்லலாம். அது

எப்பொழுது நிகழும் என்று குறிப்பாகச் சொல்ல முடியாது'' என்றாராம்.

20. எட்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடுகள் பிளவுபட்டு நொறுங்கி, ஜனங்கள் அவ்விடம் விட்டு ஓடுகின்றனர் என்னும் செய்தி இவ்வாரச் செய்தித்தாள்களின் தலைப்பில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்தது. அதை தடுத்து நிறுத்தும் வழியை அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதை தடுத்து நிறுத்த எவ்வித வழியுமில்லை.

21. தேவன் தாம் விரும்பின எதையும் செய்வார். அதை எப்படி செய்ய வேண்டு மென்று அவருக்கு ஆலோசனை கூற யாருமேயில்லை. நீங்கள் ஒருக்கால் வீடுகள் கட்டலாம், விஞ்ஞான ரீதியில் செயல் புரியலாம். ஆனால் தேவனோ

விஞ்ஞானத்தை படைத்தவர், அவரை நீங்கள் எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும்.

அவர் விரும்பினால், இன்று காலை வண்டுகளைக் கொண்டு பூமியை அவரால் நிர்மூலமாக்க முடியும். 'வண்டுகள் உண்டாகக் கடவது' என்று அவர் கட்டளையிட்டால், அரைமணி நேரத்தில் நாற்பது மைல் உயரத்திற்கு வண்டுகள் தோன்றி, எங்கும் பரவி, இப்பூமியில் வாழும் மனிதர்களைக் கொன்று போடும் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர் தேவனாயிருக்கிறார். அவர் சர்வ அதி காரமும் கொண்டவர், எனவே அவர் விருப்பப்படி அவரால் செய்ய இயலும்.

# லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் மூழ்கிப் போகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-07-25M கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்

127. ஒவ்வொரு முறையும் நான் லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணத்துக்கு விஜயம் செய்யும்போது, சென்ற முறை கண்டதைக் காட்டிலும் அதிகமான மயிர் கத்தரித்துள்ள பெண்களையும், பெண்களைப் போல் காணப்படும் ஆண்களையும் காண்கிறேன்.

அநேக போதகர்கள் ஸ்தாபனங்களைச் சேர்ந்து கொள்கின்றனர்.

உங்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை.

உங்களில் செய்யப்பட்ட பலத்த கிரியைகள் சோதோமிலும் கொமோராவிலும் செய்யப்பட்டிருந்தால், அவை அழிந்து போகாமல் இன்றும்

நிலைத்திருக்கும்'' கப்பர்நகூமே! தேவ தூதன் (Angel) என்னும் பெயரால் அழைக்கப்படும் லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணமே!

என்ன நேரவிருக்கின்றது என்பதைப் பாருங்கள்.

லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் மூழ்கிப் போகும்.

எப்பொழுது என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் அது நிறைவேறுவது உறுதி.

வாலிபர்களே, என் காலத்தில் அது நிகழ்வதை நான் காணாவிட்டால், நீங்கள் கவனம் செலுத்திக் கொண்டே வாருங்கள். அது கடலில் மூழ்குவது உறுதி.





## லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் ஒரு நாள் மூழ்கி விடும் என்று நான் அங்கு முன்னறிவித்தேன். அது கர்த்தர் உரைத்ததாவது! ஆகவே அது நிச்சயம் நிறைவேறும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-12-04 ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்

191. **கலிபோர்னியாவில் நான் கடைசியாக அளித்த செய்தி என் நினைவுக்கு வருகின்றது. நான் மறுபடியும் அங்கு போகமாட்டேன் என்று நினைத்தேன்.**

**லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் ஒரு நாள் மூழ்கி விடும் என்று நான் அங்கு முன்னறிவித்தேன். அது கர்த்தர் உரைத்ததாவது ! ஆகவே அது நிச்சயம் நிறைவேறும். அவளுடைய முடிவு நெருங்கி விட்டது. அது எப்பொழுது நேரிடும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது நிகழுமென்பது உறுதி. நான் அவ்விதம் உரைத்தபின்பு நிலநடுக்கங்கள் உண்டாகி அந்தப் பட்டினத்தை அசைத்தன.**

192. தூதன் இறங்கி வந்த போது உங்களில் சிலர் அந்தக் குன்றின் மேல் நின்று கொண்டிருந்தீர்கள். அப்பொழுது வெளிச்சம் உண்டாகி, நாம் நின்று கொண்டிருந்த குன்றைச் சுற்றிலும் அக்கினி விழுந்தது. அப்பொழுது கற்பாறைகள் பிளவுபட்டு, உடைந்து, நம்மைச் சுற்றிலும் விழுந்தன. மூன்று முறை வானத்திலிருந்து இடிமுழக்கம் உண்டானது. அப்பொழுது நான், "மேற்கு கடற்கரையின் மேல் நியா யத்தீர்ப்பு விழும்" என்று அறிவித்தேன். இரண்டு நாட்கள் கழித்து அலாஸ்கா ஏறக்குறைய தண்ணீரில் மூழ்கிவிட்டது.

193. **இதை உரைத்த அதே தேவன், 'லாஸ் ஏஞ்சலிஸ் அழிந்து விடும்' என்று உரைத்துள்ளார். அது எப்பொழுது நேரிடும் என்று என்னால் கூற முடியாது.**

194. கப்பர்நகூமைக் குறித்து ஆண்டவர் கூறினதை அப்பொழுது நான் யோசித்துக் கூட பார்க்கவில்லை. நான் வேதபுத்தகத்தைத் திறந்து இயேசு கூறினதைப் படித்தேன்; “வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப் படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்” (மத்.11:23). அது உரைக்கப்பட்ட 150 ஆண்டுகளுக்குப் பின்னர், கப்பர்நகூம் தண்ணீரில் மூழ்கினது.

195. இவையனைத்தும் உரைத்து நிறைவேற்றின அதே தேவ ஆவியானவர், “தூதர்களின் பெயரை (லாஸ் ஏஞ்சலிஸ்) சூடிக் கொண்டிருக்கும் கப்பர்நகூ மே, நீ எவ்வளவாக உன்னை வானபரியந்தம்

உயர்த்திக் கொண்டாய்! நீ சாத்தானின் உறை விடமாக இருக்கின்றாய்.

196. போதகர்களின் கல்லறைத் தோட்டமாக நீ அமைந்திருக்கிறாய். நல்லவர்கள் உன்னிடம் வந்தால் அவர்கள் எலிகளைப் போல் மாண்டு போகின்றனர். உனக்கு என்ன நேர்ந்தது?

197. **தூதர்களின் பெயரால் உன்னை அழைத்துக் கொள்பவளே! உன்னில் செய் யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமில் செய்யப்பட்டிருந்ததானால், அது இன்று நிலைத்திருக்கும்" உன் நேரம் வந்துவிட்டது" என்று கூறுகின்றார். நான் கூறினது நிறை வேறாமல் போனால், என்னைக் கள்ளத் தீர்க்கதரிசியாகக் கருதுங்கள்.**

198. இத்தரிசனம் தோன்றின தினத்தின் முந்நாள் இரவில், மணவாட்டி அணி

வகுத்து செல்லும் காட்சியை முன்கூட்டியே நான் தரிசனத்தில் கண்டேன். ஒரு அழகிய பெண்மணி ஒழுங்காக ஆடையணிந்து இந்தப் பக்கம் அணிவகுத்து சென்றாள். அத்தரிசனத்தில் ஒருவர் என்னருகில் நின்று கொண்டிருந்தார். அவர் என்னிடம், "மண வாட்டியின் அணிவகுப்பின் முன்னதான காட்சி (Preview)" என்றார். அவள் ஒரு பக்கம் வந்து மறுபக்கம் சென்றாள்.

199. மற்றொரு பக்கத்திலிருந்து ஆசிய சபை வருவதைக் கண்டேன். அதைக் காண ஆபாசமாக இருந்தது. அதன் பின்னர் ஐரோப்பிய சபை வந்தது. அதுவும் அதே நிலையில் இருந்தது. அதன் பின்பு ராக் அண்டு ரோல் (Rock and Roll) இசை கேட்டது. அந்த இசைக்கு ஏற்ப நடனமாடி அமெரிக்க சபை வந்தது. அவள் ஆடை எதுவும் அணிந்திருக்கவில்லை. செய்தித்

தாள் போன்ற ஒன்றை அவள் முன் பாகத்தில் பிடித்துக் கொண்டிருந்தாள். ராக் அண்டு ரோல் இசைக்க நடனமாடிக் கொண்டே சென்றது அந்த அமெரிக்க சபை.

200. அவர் சமூகத்தில் நான் நின்றவனாய், “ஒரு போதகன் என்னும் முறையில் இதை மாத்திரமா என்னால் சாதிக்க முடிந்தது? நான் விலகிக் கொள்ள விரும்புகிறேன். போதகர்கள் நாங்கள் அனைவரும் ஒருங்கே இதை தானா சாதிக்க முடிந்தது?” என்று கவலையுடன் கூறினேன்.

201. அந்த பெண்கள் கடந்து செல்லும் போது ராக் அண்டு ரோல் இசைக்கு ஏற்றவாறு ஆபாச நடனங்களைப் புரிந் தனர். அவர்களுக்குக் குறுகிய கூந்தல்

உண்டாயிருந்தது. அவர்கள் முகங்கள் வண்ணம் தீட்டப்பட்டிருந்தன. ஆயினும் அவர்கள் பண்புள்ளவர்களாகக் கருதப் பட்டனர். நான் வெட்கத்தால் தலையைத் திருப்பிக் கொண்டேன். முன்பாகத்தை மறைக்க ஏதோ ஒன்றை அவர்கள் தங்கள் கைகளில் பிடித்திருந்தனர். அவர்கள் பின்பாகமோ நிர்வாணமாய் இருந்தது. என்னே ஒரு அவமானமான செயல்!

202. அதை என்னால் தாங்க முடியவில்லை. நான் தலையை மறு பக்கம் திருப்பிக் கொண்டு மிகவும் அழுதேன். அவரும் அங்கு நின்று கொண்டிருந்தார். இக்காலத்துக்கென்று நியமிக்கப்பட்ட சபை யின் போதகனாக, இவ்வளவு மாத்திரமா அவருக்காக நான் சாதிக்க முடிந்தது. “ஆண்டவரே, என்னால் அதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை,

நான் மரிக்கட்டும், நான் விலகிவிடு கிறேன்” என்று கதறினேன். அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தை அடைந்தபிறகு, கீழே சென்று விட்டனர்.

203. அப்பொழுது 'யுத்தம் செய்வோம் வாரும், கிறிஸ்து வீரரே” என்னும் பாட்டைக் கேட்டது போன்றிருந்தது. அப் பொழுது பரிசுத்தவான்களாகிய ஒரு பெண்மணி குழு, நீண்ட கூந்தல் தரித்து, ஒழுங்கான முறையில் ஆடையணிந்த வர்களாய், அணிவகுத்து வந்தனர். காண்பதற்கு அவர்கள் மிகவும் ஒழுக்க முள்ளவர்களாகவும், சுத்தமாகவும் இருந் தனர். அவர்களுடைய கால் அசைப்பு (Step) சுவிசேஷத்திற்கு ஏற்றவாறு அமைந்திருந்தது. அவர்கள் தான் தேவ னுடைய வார்த்தை. ஒவ்வொரு தேசத் திலிருந்து ஒரு நபர் மாத்திரமே அவ்

வணியில் உள்ளது போல் தோன்றினது. அவர்கள் என்னைக் கடந்து சென்றபோது நான் கூர்ந்து கவனித்தேன். அவர்கள் மற்ற குழுக்களைப் போல் கீழே செல்லாமல், உயர சென்றனர். அவர்களில் இரண்டு அல்லது மூன்று நபர்கள் அணிவரிசையை விட்டு விலகிச் செல்வதை நான் கண்டேன். அப்பொழுது நான், “வரிசையில் செல் லுங்கள்” என்று கூச்சலிட்டேன். அந்த தரிசனம் என்னை விட்டு அகன்ற பின்பும், “வரிசையில் செல்லுங்கள்' என்று நான் அறையில் கூச்சலிட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தேன்.

---



ஆயிரத்து ஐந்நூறு மைல் நீளமும் நானூறு மைல் அகலமுமுள்ள அதன் துண்டு ஒன்று, இந்நாட்களில் ஒன்றில், அந்த பெரிய பிளவுக்குள் நூறு அல்லது நாற்பது மைல் ஆழத்தில் சரிந்து விழுந்து விடும். அப்பொழுது அலைகள் உயர எழும்பி கென்டக்கி நாடு வரை அடிக்கும். அப்படி நடக்கும்போது, அது உலகத்தையே மிகவும் கடினமாக அசைக்கும். அப்பொழுது உயரே உள்ள அனைத்தும் குலுங்கி கீழே விழும்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-08-22E சிந்திக்கும் மனிதனின் வடிகட்டும் பொருள்

144. இயேசு “குருடரான பரிசேயரே" என்று கதறினது போல், என் இருதயத்திலுள்ள பரிசுத்த ஆவியும் இன்றிரவு **"குருட்டு லவோதிக்கேயாவே, எத்தனை தரமோ உனக்கு எழுப்புதலைக் கொடுக்க மனதாயிருந்தேன். ஆனால் இப்பொழுது உன் வேளை வந்துவிட்டது. இப்பொழுது மிகவும் காலதாமதமாகிவிட்டது. தேவன் உன்னிடத்தில் அனுப்பினவர்களை நீ எவ்வளவாக பரியாசம் செய்தாய்! ஆனால் இப்பொழுதோ உன் வேளை வந்து விட்டது, ஓ, அமெரிக்க ஐக்கிய நாடே, அமெரிக்க ஐக்கிய நாடே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்**

**கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக தேவன் எத்தனை தரமோ உன்னைக் கூட்டிச் சேர்த்து கொள்ள மனதாயிருந்தார். ஆனால் உனக்கோ மனதில்லாமற் போயிற்று'** என்று கதறுகிறது.

இப்பொழுது இந்த சத்தமானது ஒரு கரையிலிருந்து மறு கரைக்கும், வடக்கிலிருந்து தெற்குக்கும், கிழக்கிலிருந்து மேற்குக்கும் சென்று கொண்டிருக்கிறது.

**எவ்வளவாக தேவன் உன்னைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தார் ! ஆனால் உனக்கோ மனதில்லாமற் போயிற்று. இப்பொழுதோ உன் வேளை வந்து விட்டது.**

145. நாடுகள் உடைகின்றன, உலகம் பிளக்கின்றது.

ஆயிரத்து ஐந்நூறு மைல் நீளமும் நானூறு மைல் அகலமுமுள்ள அதன் துண்டு ஒன்று, இந்நாட்களில் ஒன்றில், அந்த பெரிய பிளவுக்குள் நூறு அல்லது நாற்பது மைல் ஆழத்தில் சரிந்து விழுந்து விடும்.

அப்பொழுது அலைகள் உயர எழும்பி கென்டக்கி நாடு வரை அடிக்கும்.

அப்படி நடக்கும்போது, அது உலகத்தையே மிகவும் கடினமாக அசைக்கும்.

அப்பொழுது உயரே உள்ள அனைத்தும் குலுங்கி கீழே விழும்.



# பிறகு, “லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்கடியில் மூழ்கிவிடும்” என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: வெட்கப்படுதல், 65-07-11

20. நான் அங்கிருந்த போது, ஏதோ ஒன்று என்னைத் தாக்கியது. முப்பது நிமிடங்கள் எனக்கு ஒன்றுமே தெரிய வில்லை. ஒரு தீர்க்கதரிசனம் உரைக்கப் பட்டது. சகோ. மாஸ்லி, மற்றும் பில்லி, முதலாவதாக நான் நினைவுக்கு வந்த போது, நான் தெருவில் நடந்து கொண் டிருந்தேன். அது, ''தூதர்களின் பெயரால் உன்னை அழைத்துக் கொள்ளும் கப்பர் நகூமே!“ என்றது. அது லாஸ் ஏஞ்சலிஸ், தூதர்களின் (angels) பட்டினம் பாருங்கள், தூதர்கள். ''வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப் பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்

கும் நிலைத்திருக்கும்”. இவையாவும் எனக்கு நினைவு இல்லாமலிருந்த போதே. பாருங்கள்?

நான் எவ்வளவாக கிறிஸ்துவை உயர்த்தி சபைக்குச் சொல்ல ஆரம்பித்தேன், நான், “ஸ்திரீகளே, நான் எவ்வளவாக உங்களிடம் வந்து இவைகளுக்கு விரோதமாக பிரசங்கித்த போதிலும்; மனிதர்களே, போதகர்களே, நீங்கள் எப்பொழுதும் அதை நிராகரித்து, அதை செய்து கொண்டே வந்தீர்கள், தேவனுடைய வார்த்தை ஒன்றுமற்றது என்பது போல் அதை மிதித்து போடுகின்றீர்கள்'' என்றேன்.

21. எனக்கு நினைவு வந்தபோது நான், “அப்படிப்பட்ட ஒரு வேத வாக்கியம் இருக்கிறதே” என்று சொல்லி அதை தேடினேன். அது இயேசு கடற்கரையிலிருந்த

கப்பர்நகூமைக் கடிந்து கொள்வதாகும். அன்றிரவு நான் வேத வாக்கியங்களை ஆராய்ந்தேன், வீட்டுக்கு வந்து சரித்திரப் புத்தகங்களைப் படித்தேன். சோதோம் கொமோரா ஒரு காலத்தில் செழிப்புள்ள பட்டினமாகத் திகழ்ந்தது. அது உலகில் புறஜாதியாரின் தலைமை ஸ்தலமாக விளங்கினது. உங்களுக்குத் தெரியுமா? அந்த பட்டினம் பூமியதிர்ச்சியின் விளை வாக உப்புக் கடலுக்குள் (Dead Sea) மூழ்கினது. இயேசு அங்கு நின்றுகொண்டு, “கப்பர்நகூமே, உன்னில் செய்யப்பட்ட செய்கைகள் சோதோமிலே செய்யப்பட் டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்பட வேண்டும்'' என்றார். அவர் தீர்க்கதரிசனம் உரைத்து இருநூறு அல்லது முன்னூறு ஆண்டுகள் கழித்து, மற்ற கடற்கரை பட்டினங்கள் ஒவ்வொன்றும்

அப்படியே நிலைத்திருந்த போது, கப்பர் நகூம் மாத்திரம் கடலுக்கடியில் மூழ்கி விட்டது, பூமியதிர்ச்சி ஒன்று அதை கடலுக்குள் மூழ்கடித்துவிட்டது.

22. பிறகு, “லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக் கடியில் மூழ்கிவிடும்'' என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. நான் வீடு திரும்பி, பின்பு, ஆப்பிரிக்காவுக்குச் சென்றேன். நான் ஆப்பிரிக்காவில் இருந்த போது, லாஸ் ஏஞ்சலிஸில் பூமியதிர்ச்சி உண்டா னது. விஞ்ஞானிகள்... நீங்கள் அதைப் பார்த்திருப்பீர்கள், அது தொலைக்காட்சி யில் காண்பிக்கப்பட்டது. லாஸ் ஏஞ்சலி ஸில் சில பெரிய, அழகிய வீடுகள் இடிந்துபோயின - ஒரு விடுதியும் (motel) கூட, இப்பொழுது அங்கு... அந்த பூமியதிர்ச்சி நேர்ந்த முதற்கு, இரண்டு அல்லது மூன்று அங்குலம் அகலமுள்ள

ஒரு பிளவு பூமியில்உண்டாகியுள்ளது. அது அலாஸ்காவில் தொடங்கி, அலூசியன் தீவுகளைச் சுற்றி வந்து, கடலுக்குள் சுமார் நூறு அல்லது நூற்றைம்பது மைல்கள் தூரம்சென்று, மறுபடியும் சான்டியாகோவுக்கு வந்து கலிபோர்னியா அல்லது லாஸ்ஏஞ்சலிலை அடைந்து, மறுபடியுமாக கலிபோர்னியாவின் வடபாகத்தின் கீழ் சான்ஜோஸ் என்னும் சிறிய இடத்திற்கு வந்துள்ளது.

23. இந்த விஞ்ஞானி, அவரைப் பேட்டி கண்டபோது பேசினார். நாங்கள் அதைத் தொலைகாட்சியில் கண்டோம். அவர், "அதன் கீழ் சுழலும் பாறைக் குழம்பு (Lava) உள்ளது'' என்றார். அவர் மேலும், "அந்த துண்டிக்கப்பட்ட பகுதி (chunk) உடைந்து வந்து விடும் '' என்றார்.

இந்த தலைமை விஞ்ஞானியை பேட்டி கண்ட விஞ்ஞானி “அப்படியானால் அது மூழ்கிவிடுமா?'' என்று கேட்டதற்கு,

அவர், ''மூழ்கி விடுமா என்ன? அது மூழ்கத்தான் வேண்டும்'' என்று பதிலளித்தார்.

“ஆனால் அது அநேக ஆண்டுகள் கழித்து நடக்கும் ” என்றார்.

அவர், “ஒருக்கால் அது இன்னும் ஐந்தே நிமிடங்களில் நடக்கலாம், அல்லது ஐந்து ஆண்டுகள் ஆகலாம்'' என்றார். அவர் அதற்கு ஐந்து ஆண்டுகள் சமயம் கொடுத்தார்.

நான் நிச்சயமாக பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் அங்கு நின்று கொண்டிருந்த போது, அது மேற்கு கடற்கரைக்கு நியாயத் தீர்ப்பைக் கொண்டு வந்தது, அதைத்

தொடர்ந்து லாஸ் ஏஞ்சலிஸ் மூழ்கும் தருவாயில் உள்ளது. அவள் போய்விட்டாள்! அது உண்மை. அது நிகழ்ந்தே தீரும். எப்பொழுது? எனக்குத் தெரியாது.

ஓ, என்ன நேர்ந்தது? இப்பொழுது நமக்கு ஆறு கண்டங்கள் மாத்திரமேயுள்ளன. நமக்கு ஏழு இருந்தன, ஆனால் ஒன்று ஆப்பிரிக்காவுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் நடுவில் மூழ்கி விட்டது. ஓ, அது சரித்திர ஆதாரமானது. அது உங்களுக்குத் தெரியும்.

லாஸ் ஏஞ்சலிஸ் தண்ணீரில் மூழ்குமானால், அதை நீங்கள் கவனித்து வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

24. சகோ. எலஜ் பெர்ரி இங்கு மூப்பராக இருந்தபோது, இந்த பிரசங்கத்தை நான் நிகழ்த்தினேன் என்று நினைக்கிறேன். ''அந்த சமயம் வரும்...“ என்று அதில்

குறிப்பிடப்பட்டிருந்தது. திருமதி. சிம்ப்சன் அந்த பிரசங்கத்தை என்னிடம் அன்றொரு நாள் கொண்டுவரும் வரைக்கும், அதை அறியாதிருந்தேன். அதை ஒரு சிறுபுத்த கத்தில் எழுதி வைத்துக் கொண்டேன்... ”சமுத்திரம் அழுது கொண்டே வனாந் தரத்தை அடையும்.'' அது முப்பது ஆண்டு களுக்கு முன்பு கூறப்பட்டது. சால்டன் கடல், கடல் மட்டத்திற்கு இருநூறு அடி கீழேயுள்ளது. அந்த பெரிய சுழலுதல் நிகழ்ந்து, பூமி நூற்றுக்கணக்கான சதுர மைல்கள் பரப்பு கொண்ட பாகத்தை விழுங்கி அது பூமிக்கடியில் செல்லும் போது, அது அரிசோனாவில் அது பேரலையை (tidal wave) நிச்சயம் தோன்றச் செய்யும்.

25. ஓ, நாம் முடிவு காலத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாக வேண்டிய அந்த மகத்தான நேரத்தில்

இருக்கிறோம். அவர், ''பல இடங்களில் பூமியதிர்ச்சிகள் உண்டாகும், தடுமாற்ற மான நேரம், ஜாதிகளினிடையே விரோ தம், மனிதரின் இருதயங்கள் பயத்தினால் சோர்ந்து போகும். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள். ஏனென்றால் உங்கள் மீட்பு சமீபமா யிருக்கிறது'', என்றார். ஓ, என்னே!

நாடுகள் உடைகின்றன,

இஸ்ரவேல் விழித்தெழும்பினாள்

இவை தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த அடையாளங்களாம்

புறஜாதிகளின் நாட்கள் எண்ணப்பட் டுள்ளன,

திகில் எங்கும் சூழ்ந்துள்ளது

சிதறப்பட்டோரே, உங்கள் மந்தைக்குத் திரும்புங்கள்

(அதை நிச்சயமாக செய்யுங்கள்)

அந்த மீட்பின் நாள் சமீபமாயுள்ளது

மனிதரின் இருதயங்கள் பயத்தினால் சோர்ந்துள்ளன

பரிசுத்த ஆவியால் நிறைந்து,

உங்கள் தீவட்டிகளை சுத்தப்படுத்தி

நிமிர்ந்து பாருங்கள்,

உங்கள் மீட்பு சமீபமாயுள்ளது!

(அது உண்மை).

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யுரைக்கின்றனர்

கிறிஸ்துவாகிய இயேசுவே நமது தேவன் என்னும்

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் மறுதலிக்கின்றனர்.



# லாஸ் ஏஞ்சலிஸ், ஹாலிவுட் ஆகிய ஸ்தலங்கள் ஒவ்வொரு மணி நேரமும் பல அங்குலங்கள் கணக்கில் மூழ்கிக் கொண்டிருக்கின்றன, அதைத் தடுத்து நிறுத்த முடியாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்டு 1, 1965


லாஸ் ஏஞ்சலிஸ், ஹாலிவுட் ஆகிய ஸ்தலங்கள் ஒவ்வொரு மணி நேரமும் பல அங்குலங்கள் கணக்கில் மூழ்கிக் கொண் டிருக்கின்றன, அதைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஆம், நாம் இந்த அளவுக்கு வந்து விட்டோம். எந்த வேளையிலும் அழைப்பை நாம் கேட்போம்.

அதை நீங்கள் அறிவீர்களாயின். இப்பொழுது ஒருவரும் அங்குமிங்கும் பார்க்கவேண்டாம், ஆனால் உங்கள் இருதயத்திலிருந்து நீங்கள் அதை அறி வீர்களானால், நான் உங்களைக் கேட்கி

றேன். தேவன் வெளிப்படுத்தினால் ஒழிய, உங்கள் இருதயத்தை நான் அறியேன். ஆனால் உங்கள் இதயப் பூர்வமாக, தேவனோடும், அவரது வார்த்தையோடும் விசுவாசத்தில், நீங்கள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை என்பதை நீங்கள் கண்டு கொள்ளக் கூடுமானால், "ஆண்டவரே எனக்கு உதவி புரியும்'' என்று கேட்டு அவருக்கே உங்களது கரத்தை உயர்த்து வீர்களா? ஓ, தேவனே, இங்கு நிரம்பி வழியும் இந்த சபையில் சுற்றுமுற்றும் நூற்றுக்கணக்கான கரங்கள் உயர்த்தப் பட்டுள்ளன. ஒரு வேளை இருநூறு கரங்கள் இருக்கக்கூடும். உங்களது உத்த மத்திற்காக உங்களுக்கு நன்றி.

# சோதோமின் பாவங்களுக்காக அதை தண்ணீருக்குள் முழுக்கின அதே தேவன், கப்பர்நகூமின் பாவங்களுக்காக அதை தண்ணீருக்குள் முழுக்கின அதே தேவன், லாஸ் ஏஞ்சலிஸின் பாவங்களுக்காக அந்த சீர்கேடான நகரத்தை தண்ணீருக்குள் முழுக்குவார்



## செய்தி: விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியைகள், நவம்பர் 26, 1965

56. அந்த நேரத்தில், நான் திரும்பிப் பார்த்தேன்... இப்பொழுது இங்கு உட்கார்ந்திருக்கிற ஒருவர் அன்று அங்கு நின்று கொண்டிருந்தார். நான் ராய் பார்டர் ஸிடம்..... இல்லை ராய் ராபர்ஸன் தோள் மேல் என் கையை போட்டு - அவர் முன்னாள் போர் வீரன் - சகோ. ராய், எங்காவது வேகமாக ஏதாவதின் கீழ் ஒளிந்து கொள்ளுங்கள். ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது" என்றேன்.

57. அவர், "சகோ. பிரான்ஹாமே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார்.

58. நான், பேசாதீர்கள், போய் வேக மாக ஏதாவதின் கீழ் ஒளிந்து கொள் ளுங்கள்' என்றேன். நான் பக்கத்தில் இருந்த நீண்ட பிடி மண்வெட்டியை (shovel) கையிலெடுத்துக் கொண்டு, அவர் களை விட்டு நடந்து சென்றேன். ஏனெனில் நான் இருக்கும் இடத்தில் தான் அது சம்பவிக்கும் என்று அறிந்திருந்தேன்.

59. அதன் பக்கத்தில் ஒரு பெரிய மலைக்கணவாய் இருந்தது. அது இந்த கட்டிடத்தைக் காட்டிலும் எட்டு அல்லது பத்து மடங்கு உயரமிருக்கும். அது "பெட்டி" மலைக்கணவாய், வானத்தி லிருந்து தீயைப் போல், சுழல்காற்றைப் போல் ஒன்று இறங்கி வந்து, நான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு சில அடி உயரத்தில் மலையிலிருந்து கற்களைப் பெயர்த்து, ஊடுருவி நூறு கெஜம் வரைக்கும் சென்று. அங்கிருந்த மரங்களின்

உச்சியை எரித்துப் போட்டது. எல்லோரும் ஓடி மோட்டார் வாகனங்களின் கீழ் ஒளிந்து கொண்டனர். அது மறுபடியும் மேலே சென்று, ஒரு பெரிய இடி முழக்கம் உண் டாக்கி, வானத்துக்கு சென்று, மறுபடியும் கீழே வந்தது. இப்படியாக மூன்று முறை நடந்தது. இதெல்லாம் முடிந்த பின்பு, அவர்கள் என்னிடம் வந்து, "இதன் அர்த்தம் என்ன? என்றனர்.

60. நான், “உங்களிடம் இதை கூற விரும்புகிறேன். இது நியாயத்தீர்ப்பின் அடையாளம். இன்னும் சில நாட்களில், ஒரு பெரிய பூமியதிர்ச்சி மேற்கைத் தாக்கும். அது அத்துடன் நின்று விடாது. கலிபோர்னியா, லாஸ் ஏஞ்சலிஸ் ஒரு நாள் தண்ணீரில் மூழ்கும். அது வழுக்கி தண் ணீருக்குள் போய்க் கொண்டேயிருக்கிறது" என்றேன். இரண்டு நாட்கள் கழித்து,

அலாஸ்கா பூமியதிர்ச்சி அலாஸ்காவை அசைத்தது.

61. நான் கலிபோர்னியாவில் கடைசி யாக நடத்தின கூட்டத்தில் பேசிக் கொண் டிருக்கையில், நான் தெருவில் செல்லும் வரைக்கும் என்ன நடந்ததென்று எனக்கே தெரியவில்லை. அது கலிபோர்னியாவைக் குறித்து, "கப்பர்நகூமே, கப்பர்நகூமே, தூதர்களின் பெயரை வைத்துள்ள நகரமே (அது லாஸ் ஏஞ்சலிஸ்), உன்னை வானபரியந்தம் உயர்த்திக் கொண்டாய். நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய். உன்னில் செய்யப்பட்ட பலத்த கிரியைகள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால், அது இன்று வரைக்கும் நின்றிருக்கும்" என்றது.

62. கடைசி சில நாட்களாக நடந்த மகத்தான முழக்கமும் குதித்தலும். அதன் பிறகு விஞ்ஞான சம்பந்தமான ஒரு


பத்திரிகை வெளியாகி, "அது தேன்கூடு போல் ஆகிவிட்டது. அது தண்ணீருக்குள் செல்ல வேண்டும்" என்றது. அவர்கள் அதை அறிந்துள்ளனர்..

63. நீங்கள் கவனித்துக் கொண்டே வாருங்கள். தண்ணீர் சால்டன் கடலுக்குள் புகுந்து விடும். லாஸ் ஏஞ்சலிஸ் மேல் நியாயத்தீர்ப்பு விதிக்கப்பட்டு விட்டது. அது நடப்பதற்கு முன்பே உங்களுக்கு அறிவிக்கிறேன். அது நடக்கும்போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இதை நானாக பேசவில்லை. அவர் இதுவரை கூறின ஒன்றும் நடக்காமல் பேனதில்லை. அது உண்மை. அது எப்பொழுது நடக் கும்? எனக்குத் தெரியாது.

"64. நான் வெளியே சென்றபோது, நான் கூறினது என்னவென்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் கவனித்து கேட்டு, திரும்பிச் சென்று, வேதவாக்கி

யங்களை ஆராய்ந்து பார்த்தேன். கப்பர் நகூமைக் குறித்து பேசம்போது இயேசு ஏறக்குறைய அதே வார்த்தைகளை உப யோகித்தார். சோதோமும் கொமோராவும் உப்புக் கடலின் கீழ் சென்று விட்டன. இயேசு கப்பர்நகூமைக்குறித்து உரைத்த போதே அவை உப்புக்கடலில் மூழ்கி யிருந்தன, என்று நினைக்கிறேன். அவர் உரைத்து ஏறக்குறைய நூறு ஆண்டுகள் கழித்து கப்பர்நகூம் தண்ணீருக்குள் வழுக்கி சென்றது. அது இப்பொழுது கடலுக்குள் உள்ளது. சோதோமின் பாவங் களுக்காக அதை தண்ணீருக்குள் முழுக்கின அதே தேவன், கப்பர்நகூமின் பாவங் களுக்காக அதை தண்ணீருக்குள் முழுக்கின அதே தேவன், லாஸ் ஏஞ்சலிஸின் பாவங் களுக்காக அந்த சீர்கேடான நகரத்தை தண்ணீருக்குள் முழுக்குவார்.





லாஸ் ஆஞ்சலிசே, மனந்திரும்பு !
மற்றவர்களாகிய நீங்களும் மனந்திரும்பி,
தேவனிடத்திற்கு திரும்புங்கள்.
கோபாக்கினையின் நேரம் பூமியின் மேல்
உள்ளது. சமயம் உள்ள போதே தப்பி ஓடி
கிறிஸ்துவுக்குள் வாருங்கள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

71. முடிக்கும் முன்பு, இவைகளை யெல்லாம் நான் கூறினதன் காரணத்தை சொல்லிவிட்டு, முடிந்துவிடுகிறேன். அன்றொரு இரவு, அதிகாலை சுமார் 3.00 மணிக்கு, நான் உறக்கத்தினின்று எழுப் பப்பட்டேன். இதற்கு நீங்கள் யாராகிலும் பதில் கூற விரும்புகிறேன். நான் உங்க ளிடத்தில் கர்த்தருடைய நாமத்தில் உரைத்த ஏதாவதொன்று, நிறைவேறாமல் இருந்த துண்டா? அது எப்பொழுதுமே சரியாய் இருந்து வந்துள்ளது. தேவன் எனக்குதவி செய்வராக, அது உண்மையென்று தேவன் அறிவார். இதுவரை கூறப்பட்ட ஆயிரக் கணக்கானவைகளில், உலகின் எந்த

பாகத்திலும், ஒரு வார்த்தை கூட அவர் பிசக விட்டதில்லை. அது எப்பொழுதுமே பிழையின்றி நிறைவேறி வந்துள்ளது.

அன்றொரு நாள் நான் பீனிக்ஸில் இருந்த போதும் கூட (ஏறக்குறைய ஒரு ஆண்டுக்கு முன்பு), உங்களிடம் அதைக் குறித்து கூறினேன். “இது என்ன சமயம், ஐயன்மீர்?” என்னும் செய்தியில், ஏழு தூதர்கள் அங்கு சந்திப்பார்கள் என்றும் அதுவே முத்திரைகள் திறக்கப்படுதலா யிருக்கும் என்றும்... “லைஃப் பத்திரிக்கை அதைக் குறித்து ஒரு கட்டுரை எழுதி யிருந்தது. அந்த மகத்தான அக்கினி ஜுவாலை 27 மைல்கள் விட்டம் கொண்டதாய், 30 மைல்கள் உயரத்தில் சென்றது. அது என்னவென்று அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை” என்று

அவர்கள் கூறினர் - இன்றுவரை அவர் களுக்குத் தெரியாது.

இக்கூட்டத்தில் இன்றிரவு உட்கார்ந்து கொண்டிருக்கும் சில மனிதர்கள், அது கூறப்பட்ட விதமாக பிழையின்றி நிகழ்ந்தபோது என்னுடன் கூட இருந்தனர். நடக்கப்போகும் காரியங்களை அவர் எனக்கு முன்னறிவித்தார். அவர் கூறின விதமாகவே அது பிழையின்றி நிகழ்ந்தது. அந்த முத்திரைகள் ஒவ்வொன்றையும் திறந்து சீர்திருத்தக்காரர்களின் காலம் போன்ற காலங்கள் முதற்கொண்டு மறைந்திருந்த இரகசியங்களை என்னிடம் அப்படியே எடுத்துரைத்தார்.

72. நான் மலையின் மேல் நின்று கொண்டிருந்தேன் - இங்குள்ள மூன்று அல்லது நான்கு பேர் அப்பொழுது என்னுடன் நின்று கொண்டிருந்தனர். ஆம்,

அதற்கதிகமானவர்கள். நான் மலையின் மேல் ஏறிச்சென்று கொண்டிருந்த போது, "பரிசுத்த ஆவி என்னிடம் அந்த கல்லை கையிலேடு" என்றார். (நாங்கள் வேட்டை யாடிக் கொண்டிருந்தோம்). அவர், "அதை மேலே எறிந்து, **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று சொல்" என்றார்.

நான் அப்படியே செய்தேன். அப்பொழுது அங்கிருந்து ஒரு சிறு புனல் (Funnel) வடிவத்தில் காற்று இறங்கி வந்தது. நான், "இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தேவனுடைய கரத்தைக் காண்பீர்கள்" என்றேன். இப்பொழுது இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் மனிதர் சிலர் என்னுடன் அப்பொழுது இருந்தனர்.

அடுத்தநாள் காலை 10 மணியளவில் நான் அங்கு நின்று கொண்டு, "ஆயத்த மாகுங்கள். காரின் அடியில் சென்று

விடுங்கள். (இராணுவத்தில் பணி புரிந்தவர்) ஏதோ ஒன்று நிகழவிருக்கின்றது“ என்றேன். அப்பொழுது வானம் தெளிவாயிருந்தது. அந்த பெரிய பள்ளத்தாக்கில் சுழலும் அக்கினி மிகுந்த சத்தமிட்டு வானத்திலிருந்து இறங்கி வந்து, பாறையின் சுவர்களைத் தாக்கினது. நான் அதற்கு நேராக கீழே நின்று கொண்டிருந்தேன். நான் தொப்பியைத் கழற்றி தலை வணங்கினேன். அது எனக்கு மேலே மூன்று அல்லது நான்கு அடி உயரம் வரை வந்து, அந்த சுவற்றில் ஒரு பெரிய குழியை இப்படி உண்டாக்கி, வெடித்து, மேலே சென்றது. மறுபடியும் அது சுழன்று கீழே வந்தது. இப்படியாக மூன்று முறை நிகழ்ந்தது. அது 200 கெஜம் தூரம் வரைக்கும் அங்கிருந்த புல் புதர்களின் பாகத்தை வெட்டி வீழ்த்தினது. அவர்கள்

”ஆமென்“ என்று சொல்வதைக் கேட்டீர் களா? இது நடந்த போது, அவர்கள் என்னுடன் கூட இருந்தனர். பாருங்கள்.

அது மூன்று முறை வெடித்தது.

73. அவர்கள் காரின் அடியிலிருந்து வெளியே வந்து என்னிடம் வந்த போது, நான், “அது மாத்திரம் உங்களை தாக்கி யிருந்தால், உங்களில் ஒன்றும் மீதம் இருந்திருக்காது” என்றேன்.

நான் “அது... அது அவர் அவர் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்” என்றேன். தேவன் சுழல் காற்றின் மூலம் பேசுகின்றார், பாருங்கள்.

அங்குள்ள படத்தில் நீங்கள் காணும் அதே அக்கினி ஸ்தம்பம் தான் அங்கு இறங்கி வந்தது. அது மேலே சென்ற போது அவர்கள், “இது என்ன?” என்று கேட்டனர்.

நான், “நியாயத்தீர்ப்பு மேற்கு கரையைத் தாக்குகிறது” என்றேன். அதிலிருந்து இரண்டு நாள், அலாஸ்கா தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும். பாருங்கள், அது முதன் முறையாகத் தாக்கினபோது - அந்த முதல் தாக்குதல்...

அதற்கு அடையாளமாக நீங்கள் ஏதாவதொன்றைச் செய்ய வேண்டும். ஒருவன் கலசத்தில் உப்பைப் போட்டு தண்ணீரில் எறிந்து, “**கர்த்தர் உரைக்கிறதாவது**, நல்ல தண்ணீர் உண்டாகக்கடவது” என்று கூறினது போல். வேறொருவர், இயேசு தண்ணீரை மொண்டு கற்சாடிகளில் ஊற்றி அதிலிருந்து திராட்சரசம் உண்டாக்கினது போல். அதற்கு அடையாளமாக நீங்கள் ஏதாவதொன்றை செய்ய வேண்டும்.

ஆகவே தான் ஒரு கல் மேலே எறியப்பட்டு கீழே இறங்கி வர வேண்டியதாயிருந்தது. அது அந்த சுழல் காற்றை துவக்கினது. இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் அது அந்த மலையை அசைத்து அதில் ஒரு முகடை (ridge) வெட்டினது.

74. இங்கு அமர்ந்து கொண்டு என்னையே பார்த்து கொண்டிருக்கும் சங்கை பிளேர் அப்பொழுது அங்கிருந்தார். அவர் தகர்த்தெறியப்பட்ட பாறைத் துண்டுகள் சிலவற்றைப் பொறுக்கினார். இங்கு டெர்ரி சாத்மன் இருக்கிறார். அவரும் அங்கிருந்தார். மற்றும் பில்லி பாலும், சகோதரன்... அது பாறையைப் பிளந்த போது இங்கு உட்கார்ந்திருக்கும் இன்னும் அநேகர் அதை கண்டனர். இது

கற்பனை கதையல்ல, உண்மையாகவே நிகழ்ந்த சம்பவம்.

பாருங்கள். அதே தேவன் என்னிடம் இவைகளை காண்பித்தார். அது ஒரு எழுத்தும் கூட தவறாமல் அப்படியே நிறைவேறினது. ஒருமுறை கூட அவை தவறினதில்லை. இப்பொழுது நான் அவைகளைக் குறித்து பெருமையாகப் பேசிக் கொண்டிருக்கிறேன் (bragging).

75. சில வாரங்களுக்கு முன்பு ஒரு தரிசனம் கண்டேன். நான் உயர்ந்த இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது சபையின் மாதிரிக் காட்சியை (Preview) காண்பதற்காக அழைக்கப்பட்டேன். அப்பொழுது நான் கவனித்தேன். என்னுடைய நான் இந்த பக்கம், மேற்கை நோக்கினவாறு நின்று கொண்டிருந்தேன்.

அப்பொழுது இந்த பக்கத்தில், அழகான ஒரு பெண் கூட்டம் - நன்றாக உடுத்தி, நீண்ட தலை மயிரை பின்பக்கம் கொண்டையிட்டு கொண்டு நீண்ட கை ஆடையணிந்து, பாவாடை முழங்கால் வரைக்கும் தொங்கிக் கொண்டு “யுத்தம் செய்வோம் வாரும், கிறிஸ்துவீரரே, இயேசு சேனை கர்த்தர் பின்னே செல் வோமே” என்னும் பாடலைப் போன்ற ஒரு பாடலின் இசைக்கு ஏற்றாற் போல் காலடிவைத்து, அணிவகுத்து சென்று கொண்டிருந்தனர்.

நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அவர்கள் கடந்து சென்றனர். அதில் ஏதோ ஒன்றிருந்தது, ஏதோ ஒரு ஆவி தேவன். அவர் என்னிடம், “அது தான் மணவாட்டி“ என்றார். நான் அவர்களைப் பார்த்தேன். என் இருதயம் மகிழ்ந்தது. அவள் இந்த

பக்கம் வந்து, என் பின்னால் கடந்து சென்றாள்.

அவள் அந்த பக்கம் சென்று சற்றுநேரம் கழிந்தவுடன் அந்த சத்தம், “இப்பொழுது நவீன சபை காட்சிக்கு வரப்போகின்றது” என்றது. அங்கு ஆசிய சபை வந்தது. அப்படிப்பட்ட மோசமான கூட்டத்தை நான் கண்டதில்லை. பல்வேறு நாடுகளின் சபைகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. அவர்களைக் காண்பதற்கு பயங்கரமாக இருந்தது.

76. இதை நான் ஏன் கூறுகிறேன் என்றால் தேவனுக்கு முன்பாக சத்தியத்தை உரைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவர், “இப்பொழுது அமெரிக்க சபை காட்சிக்கு வரப்போகிறது” என்று சொன் னார். நான் அப்பொழுதாகிலும் பிசாசின்

கூட்டத்தைக் கண்டிருந்தால், அது அது தான்.

அந்த பெண்கள் நிர்வாணமாய், யானை தோல் நிறம் போன்ற சாம்பல் நிறம் கொண்ட ஒன்றை அவர்களுக்கு முன்பாக பிடித்திருந்தனர். மேல் பாகத்தில் ஒன்றுமேயில்லை. அவர்கள் இந்த வாலிபப் பிள்ளைகள் ஆடும் டுவிஸ்ட் (Twist) நடனம் ஆடிக்கொண்டு வந்தனர். அந்த நடனத்திற்கு ஏற்றாற்போல் அந்த விதமான இசை. நான் குமாரி அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் கண்டுவிட்ட உடனே (Miss U.S.A) ஏறக்குறைய மயக்கமடைந்து விட்டேன்.

இது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாயுள்ளது. நான் அவருடைய ஊழியக் காரன் என்று நீங்கள் விசுவாசிப்பீர்

களானால், இப்பொழுது என்னை நம்புங் கள். உலகிலுள்ள எதற்காகவும் நான் பொய் சொல்லமாட்டேன். அது உண்மை யாயிராவிடில், அதை என்னை கூற வைப்பதற்கு உலகில் போதிய பணம் கிடையாது.

அவள் வந்த போது, என் வாழ்க்கை யில் நான் கண்டிராத மிகவும் கேவலமான காரியமாக இது இருந்தது. நான் “தேவனே, போதகர்களும், சகோதர்களாகிய நாங்க ளும் உமக்கு ஒரு மணவாட்டியைக் கொள்ள மிகவும் கடினமாக உழைத்த போதிலும், இதை தான் எங்களால் செய்ய முடிந்தது” என்று நினைத்துக் கொண்டேன்.

அவள் உடலை நெறித்து, ஹலா பாவாடை போன்ற ஒன்றை தனக்கு முன்னாலுள்ள பாகத்துக்கு நேராக பிடித்துக் கொண்டு, இந்த வாலிபப்

பிள்ளைகள் ஆபாசமான நடனக் காட்சி களில் உடலை நெளித்து ஆடுவது போல் அவளுடைய கீழ்பாகத்தை அவள் நெளித்து நடனமாடிச் சென்றாள். அது தான் அமெரிக்காவின் குமாரி கிறிஸ்தவ மார்க்கம்.

77. எனவே, தேவன் உதவி செய் வாராக. அவருடைய பார்வைக்கு அது அப்படித்தான் காணப்படுகிறது. நான்... நான் மயங்கி விழுந்திருப்பேன்.

இதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள், செய்யப்பட்ட பிரசங்கங்கள், இணங்க வைக்க எடுத்துக் கொண்ட பிரயாசங்கள் அனைத்தையும் நான் எண்ணிப் பார்த் தேன். அவர்கள் ஒவ்வொருவரும் தலை மயிரை கத்தரித்துக் கொண்டு, முன்னால் இதை பிடித்துக் கொண்டிருந்தனர். இயற் கைக்கு மேம்பட்டவருடன் நான் நின்று

கொண்டிருந்த இடத்தை அவர்கள் அடைந்தனர். அவரை என்னால் காணமுடியவில்லை, அவர் பேசுவதை என்னால் கேட்க முடிந்தது. அவர் என்னுடன் இருந்தார். அவர்கள் இந்த பக்கம் திரும்பின போது, அவர்கள்... உடலை நெளித்தும், சிரித்துக்கொண்டும், அதை முன்னால் பிடித்து கொண்டு சென்றனர்.

அங்கு அவருடைய பிரசன்னத்தில் நின்று கொண்டிருந்த அவருடைய ஊழியக்காரனாகிய நான் எவ்வளவு முயன்றும் கூட அவ்வளவு தான் என்னால் சாதிக்க முடிந்தது. நான் “தேவனே இதனால் எனக்கு என்ன நன்மை? இது என்ன நன்மை செய்தது? எல்லா அழுகையும், கெஞ்சலும், இணங்க வைக்க எடுத்துக் கொண்ட முயற்சியும், நீர் காண்பித்த மகத்தான அடையாளங்களும். நான்

அங்கு நின்று பிரசங்கம் செய்த பிறகு, வீட்டுக்குச் சென்று அழுது முறையிடு வேன். இதனால் என்ன பயன்? இவை யெல்லாவற்றிற்கும் பிறகு, இப்படிப்பட்ட ஒரு மணவாட்டியை உமக்கு நான் சமர்ப்பிக்கிறேனே" என்று நினைத்தேன்.

78. நான் அங்கு நின்று பார்த்துக் கொண்டிருந்த போது, அவள் கடந்து சென்றாள். அது எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அவளுடைய பின்பாகத்தில் ஒன்றுமே யில்லை. அதை அவள் முன்னால் மாத்திரம் பிடித்துக் கொண்டு, இந்த டுவிஸ்ட் இசைக்கு உடலை நெளித்து, கையை மேலே இப்படி உயர்த்தி, நடந்து சென்றாள்... ஓ, அது ஆபாசமான ஒரு காட்சி அவள் உடலை இப்படி அசைத்துக் கொண்டு சென்றது.

நீங்கள், “சகோ. பிரன்ஹாமே, அதன் அர்த்தம் என்ன?” என்று கேட்கலாம். எனக்குத் தெரியாது. நான் கண்டதை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

அவள் கடந்து சென்ற போது, அவளை நான் பார்த்தேன். ஓ, நான் மயங்கி விட்டேன். நான், “தேவனே, நான் குற்றவாளி. நான் முயன்று பயனில்லை... நான் விலகிவிடுகிறேன்” என்று மனதில் எண்ணினேன்.

திருமதி கார்ல் வில்லியம்ஸ், நீங்கள் இங்கு இருப்பீர்களானால், சில நாட்க ளுக்கு முன்பு நீங்கள் என்னிடம் கூறின அந்த சொப்பனம். அன்றொரு இரவு நீங்கள் அதை கண்டு, அது உங்களைத் தொல்லைப்படுத்தினதே! அதுதான். வாக னத்தை திருப்பும் சக்கரம் (Steering Wheel) என் கையிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது.

79. அதை மறந்துவிடலாமென்று முடிவு செய்தேன், அப்பொழுது திடீ ரென்று அவர்கள் மறுபடியும் வரும் சத்தத்தைக் கேட்டேன். இந்த வழியாக சென்ற அதே மணவாட்டி திரும்பவும் இந்த பக்கம் வந்தாள். அந்த சிறு கனம் பொருந்திய ஸ்திரீகள் மறுபடியும் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தேசத்தின் உடையை உடுத்தியிருந்தனர். சுவிட்சார்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகள். அவர்கள் தங்கள் தேசத்தின் ஆடையை அணிந்தவர்களாய், நீண்ட கூந்தலைக் கொண்டவர்களாய். முதலில் வந்த கூட்டத்தினரைப் போலவே இருந்தனர். அவர்கள், “யுத்தம் செய்வோம் வாரும், கிறிஸ்து வீரரே” என்னும் பாட லுக்கு காலடி எடுத்து வைத்து நடந்து வந்தனர்.

நாங்கள் நின்று கொண்டிருந்த மேடையை அவர்கள் கடந்து சென்றவுடனே, எல்லோருடைய கண்களும் அவர்களையே நோக்கிக் கொண்டிருந்தன. அவர்கள் திரும்பி, அணிவகுத்து சென்றனர். இவர்கள் வானத்திற்கு ஏறிச் செல்லத் தொடங்கின போது மற்ற கூட்டத்தார், ஒரு செங்குத்தான மலையின் ஓரத்தை அடைந்து, கீழே சென்றனர். அவர்கள் வானம் வரைக்கும் அணி வகுத்து சென்றனர்.

அவள் இவ்வாறு அணிவகுத்து சென்று கொண்டிருந்த போது, பின்னாலிருந்த சில சிறு பெண்கள் (அவர்கள் வெளிநாட்டு பெண்களைப் போல காணப்பட்டனர் - ஸ்வீடன் அல்லது சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் போன்று. அல்லது வேறெங்கோ) சுற்றும் முற்றும் பார்த்து அணியை விட்டு வெளியே வந்தனர். நான்

“அப்படி செய்யாதீர்கள்! அணியை விட்டு வெளியே வராதீர்கள்” என்று கூச்சலிட்டேன். அப்படி கூச்சலிட்ட போது, என் தரிசனம் கலைந்து, என் கையை இப்படி உயர்த்தினவாறு நின்று கொண்டிருந்தேன். நான், “நல்லது...” என்று நினைத்தேன்.

80. இன்றிரவு நான் கூறினவைகளுக்கு காரணம் இதுவே உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நாம் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகி விட்டதா? அவள் ஏற்கனவே அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு, முத்தரிக்கப்பட்டு விட்டாளா? ஒருவர் கூட அதிகமாக இருக்க முடியாதென்று உங்களுக்குத் தெரியும் அப்படியிருக்கக் கூடுமா? ஓ, ஆமாம். ஓ ஆமாம்.

காலை உணவின் போது நான் என்ன கூறினேன் என்று நினைவிருக்கிறதா?

ஆண் பெண் உடலுறவின் போது லட்சக் கணக்கான கிருமிகள் வெளிவருகின்றன. லட்சக்கணக்கான முட்டைகள் புறப்பட்டு வருகின்றன, ஆனால் அவைகளில் ஒன்று மாத்திரமே ஜீவிக்கிறது. ஆயினும் அவை யெல்லாம் ஒரே போல் உள்ளன - லட்சங்களில் ஒன்று. எல்லாமே அதே முட்டை தான், எல்லாமே அதே போன்ற கிருமிகள் தான். ஆனால் அவைகளில் ஒன்று மாத்திரமே ஜீவிக்கிறது. மற்றவை யனைத்தும் சாகின்றன. எது முதிர்ந்த முட்டையென்று, அது என்னவென்று யாரும் சொல்ல முடியாது, தேவனே அதை தீர்மானிக்க வேண்டும். அது பையனோ, பெண்ணோ, வெள்ளை தலை மயிர் கொண்டதோ என்பதை தேவனே தீர்மா னிக்கிறார். முதலாவது வருவது இணைவ தில்லை. தேவன் எதை முதலாவதாக

தீர்மானிக்கிறாரோ, அதுதான் இணைகின்றது. ஒருக்கால் ஒன்று இங்கு வரலாம், ஒன்று... அவை இணைவதை நீங்கள் சோதனை குழாயில் (test tube) கண்டால் - அதை நான் கண்டிருக்கிறேன். தேவனே அதை தீர்மானிக்க வேண்டும். எல்லாமே ஒரே போல் உள்ளன - ஆனால் தெரிந்து கொள்ளப்படுதலின் மூலம், இயற்கை பிறப்பு - ஆனால் தெரிந்து கொள்ளப் படுதலின் அடிப்படையில் நிகழ்கின்றது பிறப்பு தேவன் லட்சக்கணக்கானவைகளில் ஒன்றை தெரிந்துகொள்கிறார்.

81. இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு பிரயாணம் செய்த போது, ஏறக்குறைய இருபது லட்சம் பேர் இருந்தனர் எல்லோரும் பலி செலுத்தப்பட்ட ஆட்டுக் குட்டியின் இரத்தத்தின் கீழ் இருந்தனர்.

இல்லையென்றால் அவர்கள் உயிரோ டிருக்க முடியாது. அவர்கள் ஒவ்வொரு வரும் தீர்க்கதரிசியாகிய மோசேக்கு செவி கொடுத்தனர். அவர்கள் எல்லோரும் மோசேக்குள்ளாக சிவந்த சமுத்திரத்தில் ஞானஸ்நானம் பெற்றனர். எல்லோரும் நடனமாடினர். தேவன் சத்துருக்களை நிர்மூலமாக்கின போது, பெண்கள் அனைவரும் மிரியாமுடன் கூட சமுத்திரக் கரையில் நடனமாடினர். எல்லோரும் மோசேயுடன் நின்று, அவன் ஆவியில் பாடுவதைக் கேட்டனர். அவர்கள் எல்லோரும் வானத்திலிருந்து விழுந்த மன்னாவை வனாந்திரத்தில் புசித்தனர். ஒவ்வொரு இரவும் புதிய மன்னா வானத் திலிருந்து விழுந்தது. அது செய்திக்கு அடையாளமாயிருந்தது. அவர்கள் எல்லோரும் அதை புசித்தனர். ஆனால்

இருபது லட்சம் பேர்களில், எத்தனை பேர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைந்தனர்? இரண்டு பேர் மாத்திரமே பத்து லட்சம் பேருக்கு ஒருவர்!

கத்தோலிக்கர்களையும் கணக்கிட்டால், இன்று உலகில் ஏறக்குறைய 50 கோடி கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். விசுவாசி கள் என்று இவ்வுலகில் அழைக்கப்படு பவர்கள். இன்றிரவு எடுத்துக் கொள்ளப் படுதல் நிகழுமானால், பத்து லட்சத்துக்கு ஒருவர் என்னும் கணக்குப்படி (அப் படித்தான் இருக்கும் என்று நான் கூறவில்லை அப்படி இருந்தது), அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் 500 பேர் காணாமற்போவார்கள். அதைக் குறித்து நீங்கள் கேள்விப்படவும் மாட்டீர் கள். ஆயினும் அத்தனை பேர் காணாமற்

போவார்கள். அவர்களை எண்ணிக் கூட பார்க்க முடியாது.

82. நண்பர்களே, யோவான் ஸ்நானன் இருந்த போது நடந்து விதமாக நமக்கும் நேரிடலாம்.

சீஷர்களும் கூட, "எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்படுத்த வேண்டு மென்று அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசி களும் வேதாகமத்தில் சொல்லியிருக்கின்ற னரே" என்று கேட்டனர்.

அதற்கு அவர், "எலியா வந்தாயிற்று நீங்கள் அதை அறியவில்லை என்று உங்களுக்கு சொல்லுகிறேன்" என்றார் (மத் 17: 10,12). இந்நாட்களில் ஒன்றில், நாம் இங்கு விடப்பட்டு உட்கார்ந்து கொண் டிருப்போம். "உபத்திரவ காலத்திற்கு முன்பு நடக்க வேண்டிய எடுத்துக்

கொள்ளப்படுதல் என்னவாயிற்று?” அது ஏற்கெனவே நடந்துவிட்டது, “நீங்கள் அதை அறியவில்லை”.

83. சரீரம் முத்தரிக்கப்பட்டுவிட்டது - அதை அணிக்குள் வைத்து, அது அப்படித்தான் என்று நான் கூறவில்லை. அது அப்படியில்லை என்று நம்புகிறேன்.

ஆனால் நண்பனே... இன்றிரவு நமது இருதயத்தில், நாம் புரியும் செயல்களைக் கைவிட்டு, நமது ஜீவியத்தை சரிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனும் எண்ணம் தோன்றினால், உங்கள் ஊழியக்கார சகோதரன் என்னும் முறையில் உங்களுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன். பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு இதை முதன் முறையாக கூறுகிறேன். பொது மக்களின் முன்னிலையில் எங்காவது, எதைக் குறித்தாவது அதிக நேரம் பேசினேன்

என்றால், இன்றிரவு இந்த பொருளைக் குறித்து தான். ஏனெனில் இந்த கூட்டங்களில் எனக்கு அதிக சுதந்திரம் உண்டு. நான் தேவனுடைய தீர்க்கதரிசி யென்று நீங்கள் நம்பினால், நான் உங்களிடம் கூறினதற்கு செவி கொடுங்கள். உங்கள் இருயத்தில் சிறிது உணர்ச்சி ஏற்பட்டாலும், உடனே தேவனிடம் சொல்லுங்கள். அதை செய்யுங்கள்.

84. மனிதனே, ஒரு நிமிடம் நில். நீ சேவிக்கும் உன் ஸ்தாபனக் கோட்பாடு களைப் பார். உங்கள் சபைகளைப் பாருங் கள். அவை தேவனுடைய வார்த்தை யின்படி உள்ளனவா? “நீங்கள் ஒவ்வொரு தகுதியையும் பெற்றிருக்கிறீர்களா?” “நான் நல்லவன்” என்று நீங்கள் கூறலாம். நிக்கோதேமுவும் கூட நல்லவன் தான். அப்படியே மற்றவர்களும் இருந்தனர்.

அவர்கள் நல்லவர்கள்... பாருங்கள், அதற்கும் இதற்கும் சம்பந்தமுமில்லை.

ஸ்திரீகளே, நீங்கள் நிலைக் கண்ணாடியில் உங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஒரு ஸ்திரீ என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கூறியுள்ளார் என்பதை அறிந்து தேவனுடைய நிலைக் கண்ணாடியில் உங்களைப் பாருங்கள். சபை நிலைக் கண்ணாடியில் அல்ல, தேவனுடைய நிலைக் கண்ணாடியில் உங்களை நோக்கி, இயேசு கிறிஸ்துவின் ஆவிக்குரிய மணவாட்டியாக இருக்க உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தகுதி பெற்றிருக்கிறீர்களா என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

போதகர்களே, நீங்களும் அப்படியே சிந்தியுங்கள். ஒருவர் மனதைப் புண்படுத்தக் கூடாதென்று, இங்கு தர்மசங்கட

மான நிலையில் இருக்கிறீர்களா? அவர்கள் உங்கள் சபையினின்று புறம்பாக்கினாலும், இதை செய்ய தயாராயிருப்பீர்களா? அப்படிப்பட்ட ஒரு உணர்வு உங்களுக்கு இருக்குமானால், என் அருமை சகோதரனே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உன்னை எச்சரிக்கிறேன், அதை விட்டு உடனே வெளியே வா. ஸ்திரீயே, ஒரு கிறிஸ்தவள் பெறவேண்டிய தகுதியை நீ பெறாமலிருந்தால் - பெயர் கிறிஸ்தவளாக அல்ல, தேவனுடைய விவாக சான்றிதழ் (Marriage Certificate) நீ எப்படி இருக்க வேண்டுமென்று கூறுகின்றதோ, அவ்வாறே உன் இருதயத்திலும் உன் வாழ்க்கையிலும் நீ இருக்க வேண்டும். சபை அங்கத்தினனே, தேவனுடைய வார்த்தை உரைத்துள்ள தகுதிகளை உன் சபை பெற்றிராவிடில், அதை விட்டு

வெளியே வந்து, கிறிஸ்துவுக்குள் நுழைந்து கொள்.

85. அது பயபக்தியான எச்சரிக்கை. இது எந்த நேரம் என்று நமக்குத் தெரியாது. இந்த பட்டினம் எந்த நேரத்தில் சமுத் திரத்தின் அடியில் மூழ்கப் போகிறதென்று உனக்குத் தெரியாது.

இயேசு, "ஓ, வானபரியந்தம் உயர்த்தப் பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலும் கொமோராவிலும் செய்யப்பட்டிருந்த தானால், அவை இந்த நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்" என்றார். (மத் 11:23). சோதோமும் கொமோராவும் உப்புக் கடலின் (Dead sea) அடியில் மூழ்கி விட்டன. கப்பர்நகூமும் கடலின் அடியில் மூழ்கிவிட்டது.

தேவ தூதர்களின் (Angels) பட்டினம் என்று உரிமை கொண்டாடும் பட்டினமே (சகோ. பிரன்ஹாம் லாஸ் ஏஞ்சலிஸை குறிப்பிடுகிறார் - தமிழாக்கியோன்), நீ உன்னை வானபரியந்தம் உயர்த்தி ஆபாச மான நாகரீத்தை உலகிற்கு அனுப்பி, வெளிநாடுகளும் கூட இங்கு வந்து நமது ஆபாசத்தை ஏற்றுக் கொண்டு அதை வெளியில் அனுப்புகின்றன. நீ அழகான ஆலயங்கள், கூர்கோபுரங்கள் போன்ற வைகளைக் கொண்டிருக்கிறாய். **நீ புரியும் செயல்கள் ஒரு நாளில் நீ இந்த கடலில் அடியில் மூழ்கிவிடுவாய் என்பதை ஞாபகம் கொள்.**

அந்த பெரிய தேன்கூடு இப்பொழுதே உன் அடியில் உள்ளது. தேவனுடைய கோபாக்கினை உனக்குக் கீழே கக்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு

காலம்தான் அவர் அந்த மணல் தடையை (sand bar) பிடித்து வைத்திருப்பார்? ஒரு மைல் ஆழமுள்ள அந்த சமுத்திரம் கடந்து வந்து, சால்டன் கடலில் (Salton Sea) தள்ளவிடும். பாம்பே (Pompeii) பட்டினத்தின் கடைசி நாட்களைக் காட்டிலும் இது பயங்கரமானதாக இருக்கும்.

**லாஸ் ஆஞ்சலிசே, மனந்திரும்பு! மற்றவர்களாகிய நீங்களும் மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்புங்கள். கோபாக்கினையின் நேரம் பூமியின் மேல் உள்ளது. சமயம் உள்ள போதே தப்பி ஓடி கிறிஸ்துவுக்குள் வாருங்கள்.**

# இந்த தேசம் சுக்கு நூறாக உடைய வேண்டிய ஒரு நேரம் வருகிறது. அதை நான் 1933-ம் ஆண்டில் கண்டேன்




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-07-24 தேவன் ஒரு மனிதனை முதலில் எச்சரிக்காமல் அவனை நியாயத் தீர்ப்புக்குள் கொண்டு வருவதில்லை

46. பெருமையுள்ள நமது அமெரிக்காவும் தேவ கோபாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ளப் போவதில்லை. இங்கு நான் ஒரு நாள் பேசினது போல, இங்குதான் நான் அதைக் குறித்து பேசினேன் என்பது உறுதி எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது. இனி முன்னேறக் கூடியது எதுவுமேயில்லை. அரசியலில் முன்னேற்றம் இருக்காது, அது போய்விட்டது. சமுதாய வாழ்க்கையில் நீங்கள் முன்னேற்றத்தைக் காண முடியாது, ஏனெனில் அது மிகவும் ஒழுக்கக்குலைச் சலாகிவிட்டது. அதை நீங்கள் முன்னேறச்

செய்ய முடியாது. நீங்கள் எதிலும் நம்பிக்கை வைக்க முடியாது.

“சபையைக் குறித்து என்ன?”

நல்லது, சபையைக் குறித்து நீங்கள் ஒன்றுமே செய்ய முடியாது. அது சம்பிர தாய முறைமையாகிவிட்டது. அவர்கள் ஒரு பானை கூழுக்காக தங்கள் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுவிட்டனர். அவர் களுக்கு நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இந்த தேசத்தைக் கடந்து சென்று, அற்புதங்களையும் அடை யாளங்களையும் செய்தார். அவர்களோ அவருடைய கிருபையை தொடர்ந்து இகழுகின்றனர். அவர் தம்மை உறுதிப் படுத்தி, அவருடைய மகத்தான உறுதிப் படுத்தலின் மூலம், அவர் இந்நாளில் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

அவர்களோ அதைப் புறக்கணித்துக் கொண்டேயிருக்கின்றனர். பாருங்கள்? இப்பொழுது ஒன்றுமே விடப்பட்டிருக்க வில்லை. நீங்கள் எப்பொழுதுமே தேவ னிடம் அப்படி செய்து கொண்டிருக்க முடியாது. பாருங்கள்?

---

70. நினிவே மனந்திரும்பாமல் போயிருந்தால், தேவனுடைய நியாயத் தீர்ப்பு அவர்கள் மேல் விழுந்திருக்கும். இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், தீர்க்கதரிசி செவி கொடுக்க வேண்டும். அது ஒரு எச்சரிக்கை.

இந்த தேசத்துக்கும் அதுவேதான். நீங்கள், “சகோ. பிரன்ஹாமே, 'இந்த தேசத் துக்கு நம்பிக்கை அற்றுப் போய்விட்டது' என்று சென்ற ஞாயிறு கூறினீர்களே” எனலாம். ஆம்! "ஏன்?" அது தன்

அழைப்பை புறக்கணித்தது. அது நியா யத்தீர்ப்பை பெற்றுக் கொள்ளவேண்டும், அது பெற்றுக் கொள்ளப் போகிறது. இந்த தேசம் சுக்கு நூறாக உடைய வேண்டிய ஒரு நேரம் வருகிறது. அதை நான் 1933-ம் ஆண்டில் கண்டேன். பாருங்கள்? அதை நான் தூரத்தில்...

நீங்கள், "அப்படியானால் அது நடக்க வில்லையே" என்று கூறலாம்.

அது நடக்கும்! நான் தரிசனம் கண்ட அந்நேரத்தில் முசோலினி அதிகாரத்தில் இல்லை, மகினாட் எல்லை கட்டப்பட வில்லை, கார் முட்டை வடிவத்தில் இல்லை, கல்லூரி மாணவனைப் போன்ற ஒருவரை ஸ்திரீகள் ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கவில்லை, கத்தோலிக்க ஜனாதிபதி இருக்கவில்லை. முப்பது அல்லது அதற் கும் அதிகமான ஆண்டுகளுக்கு முன்பே

இவை முன்னுரைக்கப்பட்டன. முடிவு வரைக்கும் என்ன நடக்குமென்பதை அவர் எனக்குக் காண்பித்தார்.

அந்த காரியம், காலாகாலங்களில் அணுகிக் கொண்டிருக்கும்போது, அந்த கலசம் நிரம்புகிறது. மனந்திரும்புதல் பில்லி கிரகாம், ஓரல் ராபர்ட்ஸ் இன்னும் மற்றவர்களால் பிரசங்கிக்கப்பட்டது. தீர்க்க தரிசிகள், மற்றவர்கள், அற்புதங்களும் அடையாளங்களும் கொண்டவர்களாக இந்த தேசம் நெடுகிலும் சென்றுவிட்டனர். இருப்பினும் அது தொடர்ந்து பாவத்தில் உழன்று கொண்டிருக்கிறது. ஆகையால் தான் அவர்கள் மனந்திரும்புவதில்லை, மனந்திரும்புதல் அதைக் கொண்டு வருகிறது


USA

## Bro. Branham:

**காலை வருவதற்கு முன்பாகவே, நாம் தூள் தூளாகிப் போய், நியாயத்தீர்ப்பு இருக்கக் கூடுமானால், சபையானது வீட்டிற்குப் போவதைக் குறித்து என்ன? அது எந்த நிமிடத்திலும் வரலாம். நிச்சயமாக. ஓ, ஜனங்களே, விழித்துக் கொண்டு, வார்த்தையை வாசிப்பதின் மூலம் உங்களுக்குள்ளிருக்கும் உங்கள் ஆவிக்குரிய ஆத்துமாவை அசைத்துக் கொள்ளுங்கள். நாம் முடிவில் இருக்கிறோம். காலம் சமீபமாயுள்ளது.**

~~~~~~~

*செய்தி:* 58-05-28 **மேசியாவின் அடையாளம்**
~~~~~~~

சகோ.பிரன்ஹாம்:

தேவன் பாவத்தை வெறுக்கிறார், பாவம் நியாந்தீர்க்கப்பட்டாக வேண்டும். தேவன் அமெரிக்காவை அதன் பாவத்திற்காக மிக சீக்கிரமாக நியாயந்தீர்க்கவில்லையென்றால், அவர் சோதோம் கோமோராவை உயிரோடெழுப்பி, அவைகளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. நிச்சயமாக. நாம் விதைத்ததை நாமே அறுப்போம், ஆவிக்குரிய விதமாக எதையாவது பெற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் அது சத்தியமென்று தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். நாம் பாதையின் முடிவில் இருக்கிறோம்.

செய்தி: *தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்*

~~~~~~~~~~~

**God hates sin, and sin must be judged. It's been said, that if God doesn't judge America pretty soon for its sin, He will have to resurrect Sodom and Gomorrah and apologize to them. Certainly. And we will reap what we sow, and everybody that's got any spirituality to them is realizing that's the truth. We're at the end of the road.**

ESCAPE.HITHER.COME.QUICKLY_ WATERLOO.IA SUNDAY_ 58-0202
~~~~~~~~~~~

குறித்தகாலத்துக்குத் தரிசனம்
இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது;
முடிவிலே அது விளங்கும்,
அது பொய் சொல்லாது;
அது தாமதித்தாலும்
அதற்குக் காத்திரு;
அது நிச்சயமாய் வரும்,
அது தாமதிப்பதில்லை.

ஆபகூக் 2:3

# கடைசிகால தீர்க்கதரிசனங்கள் 3



## கலிஃபோர்னியாவின் மேல் நியாயத்தீர்ப்பு

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து